DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.21/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | ரஞ்சித்குமார் (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 22.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.12.2024ம் தேதி 11.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவு அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் அனைவரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏரியாவில் மதுவிலக்கு ரோந்து சென்றதால் நிலைய பொறுப்பு மற்றும் பாரா அலுவலில் நான் இருந்த போது 16.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவு தலைமை காவலர் 142 திரு.ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த தனியறிகையை பெற்று நிலைய குற்ற எண்.580/2024 u.s.4(1)(C) TNP கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** முதல் தகவல் அறிக்கையின் அசலை சேந்தமங்கலம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும். இவ்வழக்கினை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தலைமை காவலர் திரு.ரமேஷ் என்பவர் கொடுத்த தனியறிக்கையின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில் எதிரி மதுபான பாட்டில்களை விற்கவில்லை என்றாலும் தலைமை காவலர் ரமேஷ் கொடுத்த பொய்யான தனியறிக்கையின் பேரில் சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**